செய்தி வெளியீடு - 522 நாள் - 15/10/2014

# பத்திரிக்கைச் செய்தி

## அரசு வழங்கும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் குறித்த தகவல்:–

உயர்கல்வி பெறுவதற்கு பொருளாதாரம் தடையாக இருக்க கூடாது என்ற உன்னத நோக்கிலும், அனைத்து சமுதாய மாணவ/மாணவியர்களை போன்று ஆதிதிராவிட மாணவ/மாணவியர்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையின் அடிப்படையிலும், இவ்வரசானது பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினை செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, கற்பிப்பு கட்டணம் (Tuition Fees) உட்பட கட்டாய திருப்பி செலுத்தப்படாத கட்டணங்கள், பராமரிப்புப்படி போன்றவை அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படுகிறது.

2. அரசாணை (நிலை) எண்.32 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 28.8.2014, அரசாணை (நிலை) எண்.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 28.8.2014 மற்றும் அரசாணை (நிலை) எண்.64 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 28.8.2014ன்படி போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்திற்காக **2013–2014** மற்றும் 2014-2015ம் கல்வியாண்டிற்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. 2013-2014ம் கல்வியாண்டிற்கான நிலுவைதொகை வழங்க வேண்டிய கல்லூரி நிர்வாகத்தினை நேரடியாக ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திற்கு வரவழைத்து அனைத்து சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ் போன்றவை சரிபார்க்கப்பட்டு, கல்விக்கட்டணமானது நேரடியாக கல்லூரி நிர்வாகத்திற்கு மின்னணு தீர்வை முறையில் (ECS)முறையில் செலுத்தப்படுகிறது. பாரமரிப்பு படியும் மாணாக்கர்களுக்கு நேரடியாக மின்னணு தீர்வை முறையில் (ECS)முறையில் செலுத்தப்படுகிறது.

3. தற்போது போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு 2013-2014ம் கல்வியாண்டினை பொறுத்தவரை அனைத்து அரசு /அரசு உதவிபெறும் /சுயநிதி கல்லூரிகளில் பயிலும் இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்துள்ள தகுதியுள்ள அனைத்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு தேவையான பராமரிப்புபடி மற்றும் கல்விக்கட்டணங்கள் அரசால் வழங்கப்பட்டு விட்டது. 2013-2014ம் கல்வியாண்டினை பொறுத்தவரை நிலுவைத்தொகை ஏதுமில்லை.

4. அனைத்து சுயநிதி கல்லூரிகளும் அரசு நிர்ணயித்த கல்விக்கட்டணங்கள்/ ‘‘சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு’’ நிர்ணயித்த கட்டணங்கள் போன்றவற்றை தகுதியுள்ள மாணக்கர்களிடமிருந்து வசூலிக்க கூடாது என்று அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் பெரும்பாலான கல்லூரிகள் மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணங்களை வசூலித்திருப்பதாக புகார்கள் அரசிற்கு வந்துள்ளன. மாணாக்கர்களிடமிருந்து கல்விக்கட்டணங்களை பெற்றிருக்கும் கல்வி நிறுவனங்கள் அத்தொகையினை மாணாக்கர்களுக்கு உடனடியாக செலுத்த வேண்டும்.2013-2014ம் கல்வியாண்டில் கல்விக்கட்டணங்களை செலுத்தியுள்ள தகுதியுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் கல்வி நிறுவனங்களை தொடர்பு கொண்டு கல்விக்கட்டணங்களை பெற்றுக் கொள்ளுமாறு இத்துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது.

5. 2014-2015ம் கல்வியாண்டில் அனைத்து சுயநிதி கல்லூரிகளும் ‘‘சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக்குழு’’ / அரசு நிர்ணயித்த கல்விக்கட்டணங்களை தகுதியுள்ள மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்ககூடாது என அரசால் அறிவுறுத்தப்படுகிறது.

அரசு செயலர்

வெளியீடு:-

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை

சென்னை - 9.